சிவமயம்

gistered as a News paperin Ceylon

P. M. G. NO. H. A 69/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்வ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருஅ] யாழ்ப்பாணம்— விய ஙூ வைகாசிமீ அஉ (1946 மே 21 செவ்வாய்க்கிழமை) [இல கங


# தமிழ்மக்கள் கடமை என்ன?

## இலங்கை முன்னேறியது யாரால்?

### எக்கட்சியுடனும் இப்போதுசேரவொண்ணாது எமது முன்னேற்றத்துக்கு அதுவே வழி

—(:—:)—

### எமது பிரதிநிதிகள் இதுகாறும் செய்தன!

(நமது அரசியல்நிருபர் எழுதுகிறார்)

இதுகாறும் நாம் கூறியவற்றில் இருந்து, தமிழ்மக்களாயுள்ளார் சிங்கள மக்களுடன் ஒத்துழைக்கலாகாது என்று கூறுவதாக எவரும் தப்பர்த்தம் செய்துகொள்ள முடியாது. இலங்கை இன்று சுதந்திரப் பாதையை நோக்கி வெகுதூரம் முன்னேறியிருக்கிறதென்றால் அதற்கு மூலகாரணம் தமிழ்மக்கள் அன்றுதொட்டு இன்றுவரை ஆற்றிய மகத்தான சேவையே என்பதைத் தடித்த வகுப்புவாதிகளான செனநாயகாக்கோஷ்டியினர்தாமும் மறுக்க முடியாது. சேர். முத்துக்குமாரசுவாமி சேர், பொன். அருணாசலம், ஸ்ரீமான்கள் அ. சபாபதி, ஆ. கனகரத்தினம், H. A. P. சந்திரசேகரா என்னும் தமிழ்ப் புதல்வர்கள் அகிலஇலங்கைக்கும் செய்த சேவைதான், இன்று சிங்களத் தலைவர்களை இந்நிலையில் வைத்துளது. பூரண சுயராஜ்யம் என்று இன்று தம்பட்டமடிக்கும் இலங்கைத் தேசிய காங்கிரசை ஸ்தாபித்தவர் சேர் பொன். அருணாசலம். ஆனால் அதே சேர் பொன் அருணாசலத்துக்கு இந்தத் தேசிய காங்கிரசும், அதனைச் சேர்ந்த சிங்களத் தலைவர்களும் ஆற்றிய கைம்மாறு நாம் அனைவரும் அறிந்ததே. அதனைத் தமிழ்மக்கள் என்றும் மறக்கமுடியாது.

O

இந்த இலங்கை, சிங்களர், தமிழர், இஸலாமியர், பறங்கியர் என்பவர்களின் தாய்நாடு. அன்றுதொட்டு இன்றுவரை இந்தச் சாகியத்தார் அனைவரும் இந்த ஈழவள நாட்டில் பாலும் தேனும் போல் நட்புரிமை பாராட்டி ஜீவித்து வருகின்றார்கள். கேவலம் பதவிமோகம் பிடித்த குணசிங்காக்களும், பண்டாரநாயகாக்களும், கொத்தலாவலைகளும் தமிழ் மக்களுக்கு விரோதமாகச் சிங்களப் பொதுமக்களை எத்தனையோ தடவை கிளர்ச்சி செய்தும் அவர்களுடைய ஜம்பம் நாளிதுவரை பலிக்கவில்லை. வகுப்பு வாதிகளின் மாயவலையிற் பொதுமக்கள் வீழவில்லை. வீழப் போவதுமில்லை. எல்லா ஜாதியாரும் பரஸ்பரம் ஒற்றுமையுடன்இருந்தாற்றான் இந்த நாடு வளம்பெறும் என்ற உண்மையைச் சிங்களப் பொதுமக்கள் உணருவர் எனவே, சிங்களமக்களுடன் எமக்குக் கோபதாபம் கிடையாது; கேவலம், பதவிகளுக்காகஆசைப்பட்டு, ஒரேதேசத்தவர்க்கிடையில் பிரிவினையையும் அதன் பயனாக மனக் கசப்பையும் விளைக்க முயற்சிக்கும் சிங்களத்தலைவர் சிலரது செயல்களையே நாம் ஆட்சேபிக்கிறோம். அவர்களுடன் ஒத்துழைக்க மறுக்கிறோம். சிங்களத் தலைவராயுள்ளார் தமது குறுகிய மனப்பான்மையை அகற்றி இலங்கைப் பரிபாலனத்தில் ஏனையோர்க்கும் சமத்துவம் உண்டுதான் என்ற உண்மையை உணரும் வரை, அவர்கள் கோரும் 'ஒத்துழைப்பு' ஒருபோதும் கிடைக்க மாட்டாது.

O

சிங்களத்தலைவர்களால் அமைக்கப்படும் எந்தக் கட்சியிலும், தமிழ்ப் பிரதி நிதிகள் இப்போது சேரக்கூடாது. தமிழ்த் தலைவர்களாயுள்ளார், கேவலம் ஒன்றிரண்டு மந்திரப் பதவிகளுக்காகத் தமிழ் மக்களைக் காட்டிக் கொடுக்க வொண்ணாது. புதிய பாராளுமன்றத்துக்கான தேர்தல் முடிந்ததும், நிலைமையை நம் ஜனப் பிரதிநிதிகள் அவதானித்து அதன்பின்னர், எந்தக் கட்சியினர் இலங்கைமுழுவதுக்கும் பொதுவான நன்மைகளைச் செய்ய முன்வருகின்றனரோ, எவர் வகுப்புவாதமகற்றி பரந்தமனப்பான்மையுடன் நாட்டின் புநருத்தாரண கைங்கரியங்களில் ஈடுபடுகின்றனரோ அவர்களுடன் ஒத்துழைத்து ஏற்றனவற்றைச் செய்ய வேண்டும் அன்றி, ஏற்கெனவே

தொடர்ச்சி 6 ம் பக்கம்

## "அடுத்தமுறை அனுப்ப மாட்டோம்"

### அரசாங்கசபை அங்கத்தவர்க்கு எச்சரிக்கை

சுவபாஷா ஆசிரியர் கூட்ட நிகழ்ச்சி

ஆங்கில ஆசிரியர்களையும், சுயபாஷா ஆசிரியர்களையும்சமத்துவநிலையில்வைத்து ஒரேவிகிதமான வேதனம் உதவப்படல் வேண்டும். இதனை அரசாங்கசபை யங்கத்தவர்கள் செய்துதால் வேண்டும் இல்லையேல் இப்போதுள்ள அங்கத்தவர்களை அடுத்த தெரிவில் அனுப்பவொண்ணாது என்று சென்ற சனிக்கிழமை கொழும்பில் நிகழ்ந்த சுயபாஷா ஆசிரியர் சங்கக் கூட்டத்திற் பலர் கூறினர்.

'சம்பள விஷயமாக நியமிக்கப்பட்ட நிர்வாகசபை, சம்பள நிர்ணய விஷயத்தில் சுயபாஷா ஆசிரியர்க்கு மிகவும் அநீதி விளைத்திருக்கிறது. சுயபாஷா ஆசிரியர்க்கு ஓர்விதமான வேதனமும் ஆங்கில ஆசிரியர்க்கு ஓர்வித வேதனமும் நிர்ணயித்திருக்கிறது. இப்படியாக வித்தியாசம் பாராட்டியதைக் கூட்டம் பலமாகக் கண்டித்தது.

இலங்கைச் சுயபாஷா ஆசிரியர் சங்கக் காரியதரிசியான மிஸ்ரர் F. C. H, பர்ணாண்டோ சுதேசபாஷா ஆசிரியர்களின் தற்போதைய கேவல நிலைக்குக் கல்வி மந்திரியே காரணம் என்றும் கல்விப்பகுதியில் உள்ள உயர்தர உத்தியோகத்தர் கொழுத்தசம்பளங்கள் பெற்றுக்கொண்டு அற்ப வேதனம் பெறும் சுயபாஷா ஆசிரியர்களின் நலன்களைக் கவனிக்கின்றார்களில்லை என்றும் கூறினர்.

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கக் காரியதரிசி ஸ்ரீ K. கந்தையா அவர்களும் புதிய வேதன அறிக்கையைக் கண்டித்துப் பேசினர்.

அரசாங்கசபைக்குச் சமர்ப்பிக்க ஓர் திட்டம் தயாரிப்பதற்கு ஓர்நிருவாகசபை நியமிக்கப்பெற்றது.

## குதிரைக்கு300 மனிதனுக்கு30ரூபாவா?

### அரசாங்கசபை கள்வரின் குகையாம்!

—:—

### மிஸ்ரர் தகநாயக்காவின் கண்டனம்

கொழும்புத் துறைமுகத் தொழிலாளரின் வேலைநிறுத்தத்தின்போது அரசாங்கசபையைப்பற்றி "கள்வரின் ஒதுக்கிடம்" என்று மிஸ்ரர் தகநாயகா கூறியதை ஆட்சேபித்து போக்குவரத்து மந்திரி மிஸ்ரர் கொத்தலாவலை, அரசாங்கசபைத் தவவர்க்கு அறிவித்த செய்தி ஏற்கெனவே வெளிவந்துள்ளது. மிஸ்ரர் தகநாயக்கா, அரசாங்கசபையையும் மந்திரிமாரையும் மீண்டும் தாக்கி, பதுளையில் நிகழ்ந்த ஓர் கூட்டத்தில் பேசியிருக்கிறார். அவர் கூறியதன் சாரம் வருமாறு:—

"அரசாங்கசபையோ கள்வரின் குகை, மிஸ்ரர் செனநாயகா அவர்களின் குகையில் உள்ள பொருள்களைச் சூறையாடும் அலிபாபா ஆவர். (அலிபாபாவும் 40 கள்வரும் என்னும் அராபியக் கதையை இது குறிப்பிடுகிறது). ஏழைத் தொழிலாளர் தம் குறைகளை நிவிர்த்திப்பதற்காக வேலைநிறுத்தம் செய்துவரும் உரிமையைப் பறிக்க, அரசாங்கசபையங்கத்தவர்கள் சில ஒழுங்கு நடவடிக்கைகளைக் கையாளுகின்றனர்.

"சேர் ஒலிவர் குணத்திலகாவின் மாதவேதனம் எவ்வளவு தெரியுமா? மாதம் 3000 ரூபா. இங்கிலாந்திலே 5 பந்தயக் குதிரைகளும் இந்தியாவிலே 4 பந்தயக் குதிரைகளும் அவர்க்கு உண்டு, ஒவ்வொரு குதிரையையும் போஷிப்பதற்கு அவருக்கு மாதம் 300 ரூபா செலவாகிறது. ஆனால், இந்தப் பிரபு தம்முடைய ஒவ்வொரு சேவகனுக்கும் கொடுக்கும் வேதனம் மாதம் 30 ரூபாதான். மாதம் 30 ரூபாவோ 40 ரூபாவோ உழைக்கும் ஏழைத் தொழிலாளி 'இந்த வேதனம் சீவியத்துக்குப் போதாது, இன்னும் ஒரு 10 சதம் கூட்டித் தாருங்கள், என்று கேட்டால், சேர் குணத்திலகா என்ன கூறுகிறார்; பணம் இல்லையென்று கையை விரிக்கிறார்".

## அரசியற்றிட்டத்தில் தமிழ்மக்கள் பொறுப்பு

### தமிழ் மக்கள் தனிராஜ்யம் ஏற்படுத்தலாம் ஆங்கிலப் பத்திரிகையிற் கட்டுரை

### தமிழ்மக்கள் முயற்சிக்குப் பாராட்டு

லண்டனில் "கிரேட் பிரிட்டனும் கிழக்கு நாடுகளும்" (Great Britain and the East) என்று ஓர் பத்திரிகை வெளியிடப்படுகிறது. அது மிகச் செல்வாக்குள்ளது. இலங்கையில் இப்போது புகுத்தப்பட்டுள்ள அரசியல் விஷயமாக அப்பத்திரிகை தனது சென்றவார இதழில், இலங்கைப் புதுஅரசியல் விஷயமாகத் தமிழர் நிலை என்ன என்பதை விமர்சனப்படுத்திப் பின்வருமாறு கூறுகிறது".

'சோல்பெரிக் கூட்டத்தினரால் வகுத்து நிறுவப்பெற்றுள்ள புதிய அரசியல் இலங்கையில் ஒழுங்காகச் சீரான முறையில் நடைபெறுமோ என்று ஓர் ஆசங்கை தோன்றுகின்றது. இலங்கைத்தீவில் [illegible] னம் வாய்ந்த [illegible] இந்த அரசியலை வெறுக்கின்றனர். தமிழ்மக்கள் மிக்க முயற்சியுடையவர்கள்; இலங்கை மக்களில் மிக்க ஜீவத்துவம் வாய்ந்தவர்கள்.

"இந்த அரசியற்றிட்டத்தை சிறுபான்மையினருக்குச் சாதகமான மாற்றங்கள் செய்து மாற்றியமைக்காமல், இப்போதுள்ளபடியே திணித்துவிட்டால், இலங்கைத் தமிழ் மக்கள் வெறுப்புக் கொள்வர் இந்த அரசியலுக்கு மாறான கிளர்ச்சியை விடாது செய்துகொண்டே வருவர். அவ்வளவுடன் நிற்காது தமிழ்ப் பகுதிகளை, மத்திய அரசாங்கத்திலிருந்து பிரித்துவிடவேண்டுமென்றும், தமிழ்ப்பகுதிகள் தனிஅரசியல் நடத்தவேண்டுமென்றும் ஓர் முடிவில் [illegible] கொண்டுபோய் விடக் [illegible]".

## அபிசீனியா நட்டஈடு கேட்கிறது

இத்தலிக்கும் அபிசீனியாவுக்குமிடையே பல வருடங்களுக்குமுன் நிகழ்ந்த யுத்தத்தில் ஏற்பட்ட நட்டத்துக்காகஇத்தலி 37கோடி பவுண் ஈடு கொடுக்க வேண்டும் என்று அபிசீனியா இப்போது கேட்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், விய ஷு
வைகாசிமீ அ௨ செவ்வாய்க்கிழமை

## இந்திய சுதந்திரம்

"தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்."

என்பது வள்ளுவர் வாக்கு; இப்படியான நீதிவாக்கையனுசரித்துப் பாரத மக்கள் அறுபதுக்கு மேற்பட்ட வருடங்களாக "காங்கிரஸ்" எனப்படும் அகில இந்திய மகாநாட்டை வருடந்தோறும் கூட்டிச் செய்யாத முயற்சியெல்லாஞ்செய்து படாத பாடெல்லாம் பட்டு இந்தியநாட்டின் சுதந்திரத்தையிட்டு உழைத்துவந்தார்கள்; தம் நாட்டின் சுதந்திரத்தைப் பெறும்பொருட்டு இந்தியமக்கள் பட்ட இடரை உலகத்தில் வேறு எந்த நாட்டிலாக, எந்த மக்களாக எக்காலத்திலும் பட்டறியா ரெனலாம்; பாரதமக்கள் எத்தனையோ பேர் சுவதந்திரத்தின்பொருட்டுத் தம் ஆருயிரை அர்ப்பணஞ் செய்தனர்; இன்னும் எத்தனையோ பேர் தம் மனைவி மக்களைப் பிரிந்து சிறைக்கூடத்திற் சிறையிருந்து அங்குதானே தங்கள் ஆருயிரை விடுத்தனர். பாரதமக்கள் தம் நாட்டின் சுதந்திரத்தைப் பெறவிரும்பிய காலத்தில், பட்டபாடும் கெட்டகேடும் பல; ஆனல் அவைகளையெல்லாம் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்வதும் எழுதுவதும் பரிதாபமாகும்; தாய்நாட்டின் சுதந்திரத்தைவிரும்பித் தங்களை அர்ப்பணஞ் செய்த மகான்களின் அருமை பெருமைகள் காலகதியிற்றான் எவர்க்கும் இனிது விளங்கும்.

பிருத்தானிய மந்திரசபை அங்கத்தவர் மூவர் இந்திய மக்களின் பிணக்கையொழிக்க வேண்டுமென்று புறப்பட்டபோதே பலர் இதுவும் வீண் பிரயத்தனமென அபிப்பிராயப்பட்டனர்; ஆனற், சிலர் அவர்கள் மூலமாக இந்திய பிணக்கு ஒருவாறு ஒழிதலுங் கூடுமென உத்தேசித்தனர்; இரண்டுமாச காலமாகப் பிருத்தானிய மந்திரசபையங்கத்தவர் மூவரும் இந்தியதலைவர் பலரைச் சந்தித்து விஷயங்களை ஆராய்ந்து யோசித்தனர்; ஜின்னாவைத்தலைமையாகக்கொண்ட இஸ்லாமிய மக்களுடைய வேற்றுமையான நோக்கங்களையொழித்து அவர்களையும் ஒற்றுமைப் படுத்தலாமென இந்திய மகாநாட்டினர் தங்களால் இயன்றமட்டும் முயற்சி செய்தனர்; ஆனல் அந்த ஜின்னா கட்சி விஷயம் "நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்" என்ற நிலையில் வந்துவிட்டது; பிடிவாத குணம் பூண்ட ஜின்னா இந்திய மகாநாட்டினரின் நீதியான கேள்வி எதற்கும் உடன்படவில்லை; பிருத்தானிய மந்திரசபையார் இந்திய மகாநாட்டினருடைய மேலான நோக்கத்தையும் ஜின்னா முதலியோருடைய ஒடுங்கிய மனப்பான்மையையும்நன்கு உணர்ந்தனர். இப்பொழுது இந்தியாவின் சுவதந்திர அரசாட்சி முறையை மேற்படி மந்திரசபை அங்கத்தினர் வெளியிட்டுள்ளனர்; அந்த முறை இந்திய மக்களெவர்க்கும் திருப்திகரமானதென்றே சொல்லப்படுகின்றது; இப் புதிய பரிபாலனத்தைப் பிருத்தானிய அதிகாரிகளும் இந்திய மகாநாட்டினரும் சேர்ந்து நிர்ணயித்து வகிக்கும்வரையில் இடைக்கால அரசியல் முறை இப்பொழுது இந்தியாவிற்கு அளிக்கப்படலாயிற்று.

## தொற்றுநோய் ஆஸ்பத்திரி

### அராலிரோட்டில் அமைக்க முடிவு

வில்லூண்டியில் உள்ள தொற்றுநோய் ஆஸ்பத்திரியை நகரசங்க எல்லைக் கப்பால் உள்ள அராலிப்பாதையில் கல்லுண்டாய் நிலத்தில் அமைக்கச் சுகாதார மந்திரி தீர்மானித்திருக்கிறார். வில்லூண்டியில் தற்போது உள்ள தொற்றுநோய் ஆஸ்பத்திரி காய்ச்சற்காரரைச் சிகிச்சைசெய்யும் வைத்தியசாலையாக மாற்றப்படும்.

## டக்ரர் N.M. பெரேராவின்மநு

சென்ற 1945ம் ஆண்டு நவம்பர் மாசம் கொழும்பில் பஸ் தொழிலாளர் வேலை நிறுத்தத்தின்போது, இலங்கை சமசமாஜக் கட்சித் தலைவராய டக்ரர் N. M. பெரேராமீதுவழக்குத் தொடரப்பட்டது. கொழும்பு நீதிபதி அவருக்கு 3 மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார். இத்தீர்ப்பை ஆட்சேபித்து டக்ரர் பெரேரா உயர்தர நீதிமன்றத்துக்கு மநுச் செய்தார். உயர்தர நீதிபதி டக்ரர் பெரேராவுக்கு விதிக்கப்பட்டிருந்த தண்டனையை நீக்கிவிட்டார்.

## ஐக்கிய மலாயாவின் தேசாதிபதி

பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் தலைவராயிருந்துஇறந்த மிஸ்ரர் ரும்சேமக்டோனல்டின் புதல்வராகிய மிஸ்ரர் மல்கோம் மக்டோனல்ட், ஐக்கிய மலாய்நாடு சிங்கப்பூர் என்பவற்றுக்குத் தேசாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் தம் பதவியைக் கையேற்பதற்காகச் சென்ற சனிகிழமை இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டார்.

## யூதர் பிரச்னை

பலஸ்தீனத்தில் உள்ள யூதர் பிரச்சினையை, ஐக்கிய பாதுகாப்பு ஸ்தாபனத்துக்குச் சமர்ப்பிக்க [illegible]ஈராக் என்னும் முஸ்லீம் நாட்டில் உள்ள 5ு அரசியற் கட்சிகள் முயற்சிக்கின்றன. இதற்கு சோவிய[illegible] வியை அவை நாடு[illegible].

# புது அரசியல் திட்டம்

## ஒன்பது பாகங்கள் கொண்ட அறிக்கை

### 101 அங்கத்தவர்களைக்கொண்டு பாராளுமன்றமா?

இலங்கையின் புதிய அரசியல் திட்டம் அடங்கிய மன்னர் பிரானின் உத்திரவு விசேஷ "கெஜட்"டில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இந்த உத்திரவில் இலங்கையின் எதிர்கால அரசியற் திட்டம் பற்றி ஏற்கெனவே வெள்ளையறிக்கையில் வெளிபாகியிருந்த யோசனைகளைப் பிரிவு பிரிவாக சட்டபூர்வமாய்ப் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கின்றது. "கெஜட்"டில் பிரசுரிக்கப்பட்ட நாள் முதல் இந்த உத்தரவு நடைமுறைக்கு வருமென்று மன்னர்பிரானின் ஆக்ஞையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது

மன்னரின் ஆக்ஞை 31 பக்கங்கள் அடங்கியிருக்கிறது. இது 9 பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது பாகத்தில் மேற்சபை, பிரதிநிதித்துவசபை ஆகிய 2 சபைகளடங்கிய புதிய பாராளுமன்றம் தெரிவுசெய்யப்படவேண்டிய முறையின் அதன் அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மேற்சபையில் மொத்தம் 30 அங்கத்தினர்கள இருப்பார்கள். அவர்களில் 15 பேர்கள் ஜனப் பிரதிநிதித்துவ சபையினல் தெரிவுசெய்யப்பட்டவர்களாயும் மற்ற 15 பேர்கள் தேசாதிபதியினல் நியமிக்கப்பட்டவர்களாயும் இருப்பார்கள்,

மேற்சபை நிரந்தரசபையாயிருக்கும். கீழ்ச்சபை கலைக்கப்படுவதனல் மேற்சபை அங்கத்தினர்களின் பதவி பாதிக்கப்பட மாட்டாது. மூன்றிலொருபங்கு மேற்சபை அங்கத்தினர்கள் இரண்டு வருடத்திற்கு ஒருமுறை ஓய்வு பெறுவார்கள். இப்படி ஓய்வு பெறுபவர்கள் திரும்பவும் தெரிவு செய்யப்படலாம்.

நான்காவது பாகத்தில் தேர்தல் தொகுதிகள் நிர்ணயிக்கப்படவேண்டிய முறை தெரிவுசெய்யப்பட்டிருக்கிறது. ஜனப் பிரதிநிதித்துவ சபையில் தெரிவுசெய்யப்பட்ட 95 பிரதிநிதிகளும் நியமனம் செய்யப்பட்ட 6 பிரதிநிதிகளுமாக மொத்தம் 101 பிரதிநிதிகள் இருப்பார்கள்.

ஐந்தாவது பாகத்தில் மந்திரிசபையின் அமைப்பு விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பிரதம மந்திரி தேசாதிபதியால் நியமிக்கப்படுவார். மற்ற மந்திரிகள் பிரதம மந்திரியின் ஆலோசனையின்மீது தேசாதிபதியால் நியமிக்கப்படுவார்கள். பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம் முதலிய இலாகாக்கள் குறித்த மந்திரியிடமிருக்கும். மற்ற மந்திரிகள் குறித்த மந்திரியினல் குறிப்பிடப்படும் இலாகா பதவிகளை வகிப்பார்கள். மந்திரிகளுக்கு உதவியாக காரியதரிசிகள் நியமிக்கப்படலாம். நீதிமந்திரி உட்பட குறைந்தது 2 மந்திரிகளாவது மேற்சபையங்கத்தினர்களாய் இருக்கவேண்டும். காரியதரிசிகள்நியமிக்கப்படுவதானல் அவர்களிலும்குறைந்தபட்சம்இருவராவதுமேற்சபைஅங்கத்தினர்களாக இருக்கவேண்டும்.

ஆறாவது பாகத்தில் நீதி இலாகாவைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளது. பிரதம நீதிபதி, சுப்ரீம்கோட் நீதிபதிகள், முதலியோர் தேசாதிபதியினல் நியமிக்கப்படுவர். அவர்களுடையசம்பளங்கள் பாராளுமன்றத்துச் சபையினல் நிர்ணயிக்கப்படும்

ஏழாவது பாகத்தில் உத்தியோகத்தரை நியமிக்கும் சபைபற்றிய விவகாரங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன இது அரசியல்சம்பந்தமில்லா[illegible]யிருக்கும்.

[illegible] பாகத்தில் நிதி விஷயங்களும், ஒன்பதாவது பாகத்தில் இடைக்கால ஏற்பாடுகளும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

## யந்திரக் கலப்பைகள் வேண்டும்

### கிளிநொச்சி விவசாயிகள் கோரிக்கை

விதைநெல் அகற்றுவதற்குக் கண்டனம்

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் உணவு உற்பத்திச் சபையின் கூட்டம் ஒன்று சென்ற சனிக்கிழமை, கிளிநொச்சி நிலப்பகுதி உத்தியோகத்தரது காரியாலயத்திற் கூடியது.

கிளிநொச்சி விவசாயிகளுக்குக் குறைந்த டட்சம் 100 யந்திரக் கலப்பைகளாவது, அரசாங்கம் இலவசமாகக் கொடுத்துதவ வேண்டும் என்றும், அப்படிக் கொடுத்துஉதவும் பட்சத்தில் மண்வெட்டி, அலவாங்கு முதலிய உபகரணங்கள் உதவ வேண்டியதில்லை என்றும், நிருவாகசபை அரசினரைக்கேட்கத் தீர்மானித்தது.

வேலியடைப்புக்குச் சாதகமாக 100 தொன் முட்கம்பியும் விவசாயிகளுக்கு அரசாங்கம் உதவ வேண்டும். மேட்டு நிலத்துக்கான விதைகளுடன் வாழை, அன்னுசிக் கன்றுகள், மரவெள்ளித் தடிகள் என்பவற்றை விவசாயிகளுக்குக் கொடுத்தல் வேண்டும். அத்துடன் இப்படியானபயிர்களுக்கு நீர்ப் பாய்ச்சுதற்கு வசதியாகக் கிணறுகள் வெட்டுதற்குப் பணஉதவி செய்யவேண்டும். இப்படியான ஓர் கிணறு வெட்டுதற்கு ரூபா 600 தேவைப்படும். குறைந்தபட்சம் 350 கிணறுகள் இப்போது வெட்டப்பட வேண்டும். இன்னோரன்ன விஷயங்களைச் சிபாரிசு செய்ததுடன் மேற்படி நிருவாகசபை, கிளிநொச்சிப்பகுதியில் விதைநெல் விஷயமாக அரசினர் கையாளும் முறையைக் கண்டித்தது. இங்குள்ள விதைநெல்லை, இங்குள்ளாரின் தேவையைப் பூர்த்தி செய்யமுன், ஏனைய இடங்களுக்குப் பெரும்பகுதி விவசாய உத்தியோகத்தர் அனுப்பினர் என்று மேற்படி சபையிற் காட்டப்பட்டது. இப்படியாக விதைநெல்லை இனியும்அனுப்புவதைத் தடுக்க வேண்டும் என மாகாணத்து உதவித் தலைவரைக் கேட்டுக்கொள்வதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

## தேவார பாராயண வகுப்பு

இவ்வகுப்பு, சென்ற வெள்ளிக்கிழமைப் பிரசுரத்தில் வெளியிட்டவாறு, சென்றஞாயிற்றுக்கிழமை (19-5-46) யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலையில் இனிது ஆரம்பிக்கப்படலாயிற்று.

## தானவரவு

வடமராட்சியைச் சேர்ந்த அல்வாய் வடக்கு, திரு. வே. சு. கணபதிப்பிள்ளை யவர்களின் இரண்டாம் புத்திரனுகிய திரு. சிவராசா அவர்களின் அபரக்கிரியைப்போது, யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார்க்குத் தானமாக வரித்தனுப்பிய ரூபா 2 சதம் 1 பெற்றும்.

மனேஜர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை

…… சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை ……

எல்லா உயிர்களுக்கும் அறிவினும் உணர்வே சிறந்தது. நாம் ஓர் உண்மையை அறிந்தமட்டில் எமக்கு அவ்வுண்மை காரணமாக அடைதற்குரிய பயன் சித்திக்கமாட்டாது. அவ்வுண்மையை மெய்யென்று நம்பினாலன்றி அப்பயன் சித்திக்காது. பொய்பேசுதல் குற்றமென்று அறிந்த மாத்திரையே எமக்கு அவ்வறிவால் எய்தற்குரிய பயன் வராது. பொய் பேசுதல் குற்றமென்று உணர்ந்தாலன்றிப் பயன் சித்தியாது. எமது இயற்கைத் தருமத்தை நாம் நுணுகியாராய்வோமாயின் அவற்றிற்கெல்லாம் உணர்ச்சியே காரணம் என்று நன்கு புலப்படும். அறிவு விளக்கமில்லாத மிருகங்களும் மாஞ்செடி முதலியவைகளும் இவ்வுணர்ச்சிகொண்டே இயங்குகின்றன. அறிவு விளக்கமுடைய மனிதர்கள் தாமும் தமது அறிவு உணர்வோடு சேர்ந்து உழைத்தாலன்றி அவ்வறிவாற் பயன்படுமாறில்லை. ஆனால் அறிவு விளக்கமில்லாதபோதும் உணர்வாற் பயன்படுதல் பெருவழக்காகக் காணலாம். ஆகவே அறிவினும் பார்க்க உணர்வு பெருஞ்சிறப்பினதென்பது எவராலும் ஒத்துக்கொள்ளத்தக்கது. உணர்வினது மேன்மையைக் கருதியே அது சீவதோற்றங்களிடத்தெல்லாம் அவைகளை இயக்குவதோர் அற்புத யந்திரமாக அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வுணர்ச்சிக்குக் காரணமாகிய இயற்கை விவேகமெனப்படும். சூக்குமபுத்தி தத்துவமானது. எமது சிற்சத்திக்குரியதோர் இயற்கைத் தருமமாகும். இத்தருமம் எம்முள் மறைந்தமைந்து எம்மை அறிவின் சலிப்பின்றி இயக்கும் தன்மையுடையது. நாம் கண்களை இமைப்பதும் உச்சுவாச நிச்சுவாசஞ் செய்வதும் பிறவும் இவ்வியற்கைத் தருமத்தின் வழியாகவேயாம். கண்களை இமைத்தலானும் உச்சுவாச நிச்சுவாசஞ் செய்தலானும் எய்தற்குரிய பிரயோசனங்களை அறிந்து நாம் அச்செயல்களைச் செய்வதல்ல; உணர்ச்சி மாத்திரையானே நாம் அவற்றைச் செய்வது. இந்த உணர்ச்சிக்கு எம்மிடத்தது எதுவோ? அமைந்து விளங்கும் கருவியை நாம் சமயஞானங்கொண்டு ஆராய்வதானல், ஆன்மாவினிடத்தே சிவசத்தியின் அதிகரிப்பு அமைந்திருத்தலை இனிது காணலாம். கடவுள் எம்மை உணர்வுக்குணர்வாய் நின்று இயக்குகின்றனரென்று சமய சாத்திரங்கள் சாதிப்பதெல்லாம் இக்கருத்துப்பற்றியேயாம். எம்மை எமது தொழில்முறைகள் அனைத்திலும் இயக்குபவர் கடவுளேயாயினும் அவர் அப்படி இயக்குமுறையெல்லாம் எமது உணர்ச்சி வாயிலாகவேயாதலின் இவ்வுணர்ச்சி சிவச்செயலுக்கு மிகச் சமீபத்திலுள்ளதோர் படியென்று கொள்ளத்தக்கது. இந்த உணர்ச்சி வாயிலாகவே கடவுள் ஆன்மாக்களையெல்லாம் படிமுறையாக ஏற்றமுறச் செய்கிறார். இந்த உணர்ச்சியின்றி யாம் அறிவு விளக்கம் பெறுவதுங் கூடாது. இவ்வுணர்ச்சி அறிவு விளக்கமின்றி இயற்கையாக எம்மிடத்து உண்டாகும்போதும் அது எமக்குப் பெரும்பயனுடையதாகும். தீமை செய்வது கேடென்பது இயற்கைமாபால் எமது உணர்வின்கண் நிகழ்வதோர் உறுதி, தீமை செய்வது கேடாதல் யாதுபற்றியெனப்பதை அறிந்த காரணத்தவஞானம் கல்லப்பட்டார் தம்முள்ளும் மிகச் சிலரேயவர். இதை அறிவு எம்மிடத்து இல்லையாமாயினும் தீமை செய்வதை மேற்கொள்ளாதொழுகுதல் நெறியுடைத்தன்று. எமது உணர்ச்சி வழி நின்று தீமையைப் பரந்தகற்றொழுகுதலே நமக்குரிய கடனாம். உலகத்திலே யாம் அறிந்தவை மிகச்சில. அறியாதவை அளவிறந்தன. எமது அறிவுக்கு விளக்கமுறாத எத்தனையோ செயல்களை யாம் உணர்வு மாத்திரையால் தினந்தோறும் புரிகின்றோம். அறிவு விளக்கமுறுமவைபற்றி அவ்வறிவுக்கு ஆதாரமும் ஆதாரபூதமாய் அமைந்துள்ள உணர்வை நாம் ஒதுக்குவோமாயின் நாம் உலகத்திலே ஒரு கணப்போதாயினும், சீவித்தல் கூடாது. அறிவு சிறப்புடையதென்பதை மறுப்பார் யாருமில்லை. அறிவோடு கூடிய உணர்வு அறிவோடு கூடாத உணர்வினும் சிறந்ததென்பது எவர்க்கும் உடன்பாடாயதோர் துணிபேயாகும். இதுபற்றி அறிவோடு கூடாதவழி நாம் உணர்வைப் புறக்கணித்து எமது இயற்கைத் தருமத்தை அலட்சியம் செய்தல் யுக்தமாகாது. பாலோடு கூடிய அன்னம் பாலோடு கூடாத வெறு அன்னத்திலுஞ் சிறப்புடையதாதல்பற்றி, பாலைப் பெறுதற்கரிய போது வெறு அன்னத்தையும் புசியாது நீக்கிவிட்டுப் பட்டினியாயிருத்தல் புத்திபாகமாட்டாது.

இக்காலத்தவர் அறிவின்மேற் கொண்ட பேரபிமானத்தால் மாட்டை இயற்கைத் தருமத்தைச் சிந்திக்கின்றார்களில்லை. யாதொரு கூட்டத்தில் யாதொரு கொள்கை அனுசரிக்கப்பட்டு வருமாயின் அக்கொள்கைக் கமைந்த நியாய மாபுகள் சாலகந்தி பற்றி மறந்தவிடத்தும் அதைக்குறித்த உணர்ச்சி அக்கூட்டத்தார் அனைவரிடத்தும் இயற்கை மாபாற் செறிந்து விளங்கும். இவ்வுணர்ச்சி வழி ஒழுகியே அவரெல்லாம் விருத்தி பெறல்வேண்டும். தழையை உண்டு சீவிக்கும் விலங்குகள் தழையை உண்டே விருத்திபெற வேண்டும். தழையினுந் தானியம் சிறப்புடையதாயினும் அச்சிறப்பு அவற்றின் உணர்ச்சியிற் கலந்தாலன்றி அவைகள் தானியத்தை உண்பதில்லை. தமது உணர்ச்சிவழி ஒழுகியே அவ்விலங்குகள் விருத்தியுறல் வேண்டும்.

இந்த உணர்ச்சியின் மாட்சி எமது அறிவு விளக்கம்பற்றிக் கிளருமிடத்து நன்கு காணத்தக்கது. நாம் யாதொரு உண்மையை அறிவு விளக்கங்கொண்டு கண்டவிடத்து அவ்வுண்மையைக் குறித்து எமது உள்ளத்திலே ஓர் உணர்ச்சி உண்டாகும். இந்த உணர்வுதானே படிமுறையாக விளைவுற்று விசுவாசமும் பக்தியுமாகப் பரிணமிப்பது. நாம் கண்ட உண்மையிலே எமக்கு விசுவாசம் இல்லையாயின் அவ்வுண்மையால் எமக்குச் சிறிதும் பயனில்லை. அறிவு விளக்கம் காரணமாக உணர்வு தோன்றுங் கிரமத்தை நாம், ஆராயுமிடத்து அறிவு தடித்தே உணர்வு தோன்றும் கிரமத்தை நாம் ஆராயுமிடத்து அறிவு தடித்தே உணர்வு பிறத்தலையும், உணர்வு தடித்தே விசுவாசம் பிறத்தலையும், விசுவாசம் தடித்தே பக்தி பிறத்தலையும், பக்தி தடித்தே [illegible] லாம்.

# இலங்கையில் உணவு உற்பத்தி

(திருநெல்வேலி, வ. சோமசுந்தரம்)

இத்தீவில் அறுபத்தாறரை இலட்சத்தார்க்கு அதிகமானமக்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அரிசியே இவர்கள் பிரதான உணவுத் தானியம்.

பயிர்ச்செய்கை முதலாம் தொழிலாளரே பெருந்தொகையினர். குறைந்த அளவில் அரைப்படி அரிசிச்சாதம் நாள் ஒன்றுக்குக் கிடைத்தால் இவர்கள் ஊக்கமாக வேலை செய்வர். தொழிலில் ஊக்கக் குறைவுக்கு உணவுக் குறைவே காரணம்.

இலங்கை மக்கள் திருப்தியாய் உண்டு உழைக்க வருடந்தோறும் நான்குகோடி புசல் நெல் விளைதல் வேண்டும். ஒன்றரைக்கோடி ஏக்கர் நிலம் உண்டு. இருபது இலட்சம் ஏக்கரில் ஒருமுறை விளைவித்தால் யாரும் சுகித்திருக்கலாம். ஐந்தரைக் கோடி ரூபாய் செலவானல் ஏறக்குறைய இரண்டரை இலட்சம் ஏக்கர் காட்டு நிலம் செய்கைபண்ணத் தகுதியுடையதாகும். முன்னே உள்ள விளைநிலத்தால் இலங்கை உணவில் ஐந்திலொரு பாகம் வந்ததாகக் கணக்குண்டு. ஐந்தரைக்கோடி ரூபாய் செலவுக்கு 50 இலட்சம் புசல் விளைவது சகசம். ஆகவே 130 இலட்சம் புசல் விளைவு உண்டானல் பழைய தேவையில் நான்கிலொரு பங்குக்கும் அதிகம் உண்டே. ஆனல் இருபத்தெட்டில் மூன்று பகுதிதானே இராகுமதி அரிசியோடு ஒருவன் பெறுகின்றான். இது என்ன விந்தை?

மந்திரிமார் 1500 ரூபா சம்பளம், பிரயாணச்செலவு, விடுதிச் செலவு, தேனீர்க் கொண்டாட்டம், விருந்துணவு, முதல் அனேக வசதியம் பெறுகிறார்கள். ஏனை மக்கள்போல் இவரும் இலங்கையரே! ஐம்பது ரூபாய்தானும் வருவாய்பெறாத கமக்காரர் பலரை வடபகுதியில் காணலாம். கல்வி, செல்வம், அடைவம், சுகபோகம் எல்லாம் ஒருங்கேபெறும் இவர்களுக்குப் புற உணர்வில்லையா? மக்களுக்காகவே சேவைசெய்கிறோம் என்று புகழும் மந்திரிமார் அம்மக்கள் எப்படிச் சுகம் பெறுகிறார்கள் என்று உணர ஆற்றல் பெற்றிருக்க வேண்டாமோ?

ஐந்தரைக் கோடி ரூபாய் விவசாயத்தின்பொருட்டுச் செலவாயிற்று என்று பத்திரிகைகள் வெளியிடுகின்றன. இவ்வளவு பெருந்தொகை கமத்தில் ஈடுபட்டால் ஒருகோடி புசல் விளைவாகாதா? காட்டு விவசாயியின் கணக்கின்படி நான்கில் ஒருபகுதி உணவை இத்தொகை வருவிக்கலாம்.

இருபத்தெட்டில் மூன்றுபடி அரிசி பெறும் இலங்கையன் குடல் வலியோடு உழைக்க, இந்திர போகத்தோடு அதிகாரிகள் தேசந்தோறும் திரிந்து உணவு தேடுவதேன? இலங்கை யுத்தத்துக்குமுன் தந்த ஐந்திலொருபகுதி தானியம் எங்கே?

கோடிக் கணக்கில் செலவுசெய்த விவசாய மந்திரியின் ஐம்பம் எல்லாம் எங்கே? ஆறு ரூபாய்க்கு கமக்காரன் நெல் கொடுக்கவேண்டுமென்று சட்டுப்படுத்துவது செங்கோலின்பாற்படுமா? விளைவு செலவு மந்திரி அறியாரா? அற்றுப் பெருக்குள்ள பகுதியிலும் வரண்ட பிரதேசத்திலும் ஒரே விலை விதிக்கும் நுண்ணறிவு படைத்தவர் ஆட்சிக்கு உகந்தவரா?

ஒன்பது மாகாணத்திலும் அதிகாரம்பெற்ற மந்திரிக்கு, ஒவ்வொரு மாகாணத்திலும் எவ்வளவு நிலம் பண்படுத்திப் பயிர்செய்ததென்றும் விளைந்த தானியம் இவ்வளவென்றும் வரவும் செலவும் ஏற்றுக்கொள்ளக் கூடியதென நாம் கணக்கு விரிக்கிறைக்க அதிகாரம் இல்லையோ? கொள்ளைநோயின் காரணமாகக் கஷ்டமடைந்த கமக்காரர் பெயர் ஊர் விபரித்து உதவிய மாடு, கலப்பை, விதைநெல், பசளை மாகாண வாரியாக அறிக்கைமூலம் வெளிவந்தால் காலப்போக்கை நோக்கித் திருப்தியடையலாமே!

நாகரீகமுள்ள நாடுகளில் விவசாயிகளுக்குச் சிறந்த யந்திரங்கள் பல உண்டு. வரண்ட பிரதேசங்களுக்கு உதவக்கூடியவை தாபித்து நிறுவி நாடு சுகமடைவதாகும்.

மகாவலி கங்கை கடலுக்கிறைக்கும் தண்ணீரில் சிறிதளவு யாழ்ப்பாணம் முதலிய அற்றுப் பெருக்கற்ற ஊர்களுக்குத் திருப்பிவிட ஐந்தரைக் கோடி ரூபாய் செலவழிக்க மனம் வைக்காத காரணமென்ன? மக்கள் மேல் வைத்த கருணைப் பெருக்கா?

"முறைகோடி மன்னவன் செய்யி
னுறைகோடி
யொல்லாது வானம் பெயல்"

என்ற பொய்யாமொழிக்கு ஆளாகாவண்ணம் நீர் வறண்ட இடங்களில், வற்றா நீர் நிலைகளைக் காவுள் தக்கிருக்கிறார். மக்களிடத்தில் கொண்ட அன்பினால் விஞ்ஞானிகள் படைத்த யந்திரங்கள் பல பெரிய அரசியல் ஞானமுடைய நாடுகளில் உண்டு. இப்பெருந்தொகை அவைகளில் செலவு செய்யக்கூடாதா? அவைகள் ஊரெல்லாம் அறுபெருகச் செய்யும்; மக்கள் அதிக உணவை உண்டாக்கலாம்.

இந்திர போகத்தோடு மந்திரிகள் அந்தரபோகமும் பெறுவார்கள்!

இயல்புளிக் கோலோச்சு மன்னவ
னுட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு.

## தென்மராட்சி வாலிப சங்கப் பொதுக்கூட்டம்

1946 ஆண்டு வைகாசி மாதம் 15ந் திகதி புதன்கிழமை மாலை 7 மணிக்கு கல்வயல் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் மேற்படி சங்கத்தலைவர் திரு. ச. துரைராசா அவர்களின் தலைமையில் மேற்படி கூட்டம் ஆரம்பமாயது. தலைவர் முன்னுரை காரியதரிசியவர்களின் அறிக்கை சமர்ப்பணமாகியதும் திரு. K. நேசையா M. A. அவர்கள் தென்மராட்சி வாலிபருக்கு இக்கால நிலைமையையொட்டி, அவர்கள் செய்யவேண்டிய கடமைகளையும் அதற்குரிய வழிவகைகளையும் ஆணித்தரமாக நன்கு விரித்துரைத்தார்.

இடையில் பாரதியார் பாடல்கள் பஜனை செய்யப்பட்டன. பின்னர் சாவகச்சேரி வடக்கு ஆசிரியர் திரு. R. T. சுப்பிரமணியம் அவர்கள் 'நாளையுலகம்' என்னும் விடயத்தைப் பீடிகையாகக்கொண்டு இளைஞரை நல்வழிப்படுத்தி, வரவிருக்கும் கஷ்ட நிலைமைகளை சீர்ப்படுத்த உபாயங் கூறினர். பாடல்கள் குறிப்புரைகள் நடைபெற்றதும் காரியஸ்தர் திரு. K. பொன்னுத்துரையவர்கள் நன்றி கூறவணக்கத்துடன் இரவு 10 மணியளவில் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முண்டகோபநிடதம்

ஐ. பொன்னையா

## முதன்முண்டகம்
### முதற்கண்டம்
(முற்றொடர்)

(அ) சிலந்திப் பூச்சியானது எங்ஙனம் (நூலைப்) படைக்கவும் ஒடுக்குகின்றதோ, பூமியில் எங்ஙனம் தாவரங்கள் தோன்றுகின்றனவோ, உயிரோடிருக்கின்ற மனிதனிலிருந்து எங்ஙனம் கேசரோமம் உடம்பு ரோமங்கள் தோன்றுகின்றனவோ: அங்ஙனமே நித்தராகிய சிவபெருமானிலிருந்து உலகம் தோன்றுகின்றது.

குறிப்பு: (க) சிலந்திநூல் சிலந்தியின் உடம்பிலிருந்து தோன்றுமேயன்றி அதன் உயிரிலிருந்து தோன்றமாட்டாது. அங்ஙனமாயினும் உயிர் நீங்கிய உடம்பிலிருந்து நூல் தோன்றுவதில்லை. ஆதலால் நூல் தோன்றுவதற்கு அதன் உயிர் ஆதாரமாய் அல்லது நிமித்தமாகவேயுள்ளது. நிமித்த காரணமாவது முதற் காரணத்தினும் வேறாய் அதிலிருந்து (முதற்காரணத்திலிருந்து) காரியந் தோன்றுதற்கு ஏதுவாயிருக்கும். இங்ஙனமே மனித உடம்பிலிருந்து உரோமம் தோன்றுதற்கண்ணும் கூறிக் கண்டு கொள்க. இனி, நிலத்திற்கண் வித்துக் கிடந்தன்றிப் பல் பூண்டு முதலிய எவையும் முளைக்கமாட்டாவாதலால், வித்திலிருந்து புல் தோன்றுவதற்கு நிலம் ஆதாரமாகும் அதனுணேயாம். இங்குக் காட்டிய உவமைகளால், நாமரூப வடிவ உலகமாகிய காரியத்துக்கு முதற் காரணம் மாயையே என்பதும், மாயைக்கு ஆதாரமாயுள்ள சிவபெருமான் நிமித்த காரணரே என்பதும் நன்கு பெறப்பட்டவாறறிக. இவ்வுண்மையறிவிப்பான் சுவேதாசுவதரோபநிடதமானது "மாயையைப் பிரகிருதி யெனவும், மாயையுடையாரை மகேசுரர் எனவும் அறிக." (௪-௧0) என்று ஐயவிபரீதத்திற்குச் சிறிது மிடமின்றித் தெளித்துரைத்தது. பிரகிருதி, முதற் காரணம், உபாதானம் என்பன ஒரு பொருட் கிளவி. "வித்துண்டா மூல முளைத்தவா தாரசமா, மத்தன்றாணிற்றல்" என்றது சிவஞானபோதச் செந்தமிழ்ச் சுருதி. (௧-௨) இவ்வாறுலக உலகத்துக்குப் பிரமம் முதற் காரணம் என்று தலையிலடித்துக் கொள்ளுவாரைச் சுருதி கைவிட்டவாறறிக. "நுரையுந் திரையு நொப்புமு கொப்புமு, வரையில் சீகர வாரியுங் குரைகடற், பெருந்தனுஞ் சிறுத்தும் பிறங்குவ தோன்றி யெண்ணிலவாகி யிருங்கட லடங்குந், தன்மைபோலச் சராசர மனைத்து, நின்னிடைத் தோன்றி நின்னிடை யொடுங்கும்" (பட்டினத்துப் பிள்ளை) என்றற் றொடக்கத்த வசனங்களெல்லாம், முதற்காரணமாகிய மாயைக்குச் சிவபெருமான் ஆதாரமாய் நிற்றல்பற்றி யெழுந்தனவே யென்பது மேலுரைத்தவாறு பற்றியறியப்படும்.

குறிப்பு (உ) இனி, மாயை முதற் காரணம், நிமித்தகாரணனாகிய முதல்வனும் மாயையோடு கூடி விசிட்டனாய் நின்று முதற் காரணமவன் என்பர் விசிட்டாத்துவைதிகள் (பாஞ்சராத்திரிகள் சிவாத்துவித சைவர் முதலியோர்). விசிட்டமாவது விசேடண விசேடியங்களின் இயைபு-கிளை கொம்புகளோடு கூடிய மரத்தை அதற்கு, உதாரணமாக எடுத்துக்காட்டுவர். கிளை கொம்புகள் விசேடணம், மரம் விசேடியம். முண்டகம் ௧-௩-௩ மந்திரத்திற்கு இராமாநுஜர் கடாவிடைகளோடு மிக விரிந்தெழுதிய பாடியத்தில், "இல் பட்ட எனப வற்றோடு சேர்ந்த வாழ்வைச் சிதது (அசித்து) அசித்து (பிரகிருதி) என்பவற்றோடு சேர்ந்த பிரமத்திற்குச் சிருட்டார்த்தமாகச் சுருதி சொல்லுகிறது. (?) இதனை சித்து அசித்துக்கள்—சூக்குமமான அன்மப் பிரகிருதிகள்—பிரமத்தின் சேர்ந்தவை என்பது நன்கு விளங்கும். இலை வட்டை என்பவற்றையிட்டுத் தண்டு மாத்திரமோ வாழையல்லவன்றோ. இலை முதலியவற்றோடு சேர்ந்த தண்டன்றோ வாழையாகும். இங்ஙனமே ஆன்மப் பிரகிருதிகள் சேர்ந்ததே பிரமமாகின்றது" என்று கூறுகிறார். இதனால் பிரமம் என்பது தானே தனித்து ஒரு முதலாயிருப்பதன்று என்பதும், பல பொருட் கூட்டமாகவோ, தன்னிலே பல கூறுகள் உடையதாகவோ இருக்கும் என்பதும் அவர்கம் கருத்தாதலறிக. பிரமம் தன்னொரு கூற்றிலே நிமித்தமாயும், பிறிதொரு கூற்றிலே உபாதானமாயுமாக, அதன் இருகூறும் பிறந்திறந்து அல்லற்படுகின்றது! என்னே பிரமத்தின் விசித்திரப் போக்கு, இவர் "பிரமத்தையுணர்ந்தோன் எல்லாவற்றையுமுணர்ந்தோனாவன்" எனனும் சுருதிக்கு மெய்ப்பொருள் காணப்படாமையால் இவ்வாறு யுத்திபண்ணி, நிர்விகாரமாகிய பிரமத்தின் தலையில் பல விகாரங்களைச் சுமத்திவிட்டார். இவர் பிரமம் தானே உலகிற்கு முதற்காரணம் என்றும், பிரமம் மாயையினால் மயங்கித் தன்னைமறந்து உலகமும் உயிர்களுமாய் விகாரமெய்தி அலைகழறுகின்றது என்றும் வாய்கூசாது பேசித்திரியும் மாயாவாதிகளைக் காட்டிலும் ஒருபடை மேற்போனவரல்லர் என்றொழிக.

(க) பரப்பிரமரூப சிவபெருமான் ஆன்மாக்களைத் தமது திருவமைப் பேரின்ப வீட்டில் இருத்துதற்பொருட்டு ஐந்தொழில் செய்தல்வேண்டும் என்னும் சங்கற்பத்தினாலே சலனிக்கின்றார், அவரிலிருந்து மாயை தோன்றிற்று. அந்த மாயையிலிருந்து பிராணனும், மனமும், புத்தியும், உலகங்களும், கன்மங்களினால் அமிர்தமும் உண்டாயின.

குறிப்பு (க) 'சலனிகரித்தல்-அராட் சத்தியிடமாகத் திருமேனி கொள்ளுதல். சிவஞானசித்தியார். முதலாஞ் சூத்திரம்-முதற் செய்யுளில் 'மருவிடு மனைமுத்த சித்துரு மன்னி நின்றே" என்றது இப்பொருளையுடையது. அதன் இரண்டாமதிகரணத்தில் அப்பகுதியை விரித்துரைத்த கஅ-ஞ் செய்யுள் தொடங்கி அதிகரணம் முடியவுள்ள இருபத்திரண்டு செய்யுட்களிலும் திருமேனியினியல் பனைத்தும் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது, ஆண்டுக் காண்க.

குறிப்பு (உ) "அவரிலிருந்து மாயை தோன்றிற்று" என்றது முன் ஒடுங்கியிருந்த மாயை மறுபடி தோன்றுதலைதையே குறிக்கும். "மாயையு மவன்போல் நித்தம்" என்பது எல்லாச் சுருதிகட்கும் ஒப்ப முடிந்த உண்மையாதலின் என்க.

குறிப்பு (உ) பிராணனும், மனமும் புத்தியும் என்பன போகத்திற்குரிய கருவி கரணங்களையும், உலகங்கள் என்பது போக்கியப் பொருள்களையும் கருதும், "கன்மங்களினால் அமிர்தம்" என்றதில் அமிர்தம் என்றது மோட்ச சாதனங்களை. அது இதன் இரண்டாங் கண்டத்தில் விளங்கும்.

(௧0) எவர் சர்வஞ்ஞரோ, (அதனால்) எவற்றையும் அறிந்தாரோ எவரது சங்கற்பமானது ஞானமயமாயுள்ளதோ அவரிலிருந்து பிரமாவும், நாமரூப வடிவ உலகமும் (அதன் உபாதானமாகிய) மாயையும் தோன்றுகின்றன.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### புதன் மே 22

காலை: 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 திருக்கோடிகாவல் ஆர் கிருஷ்ணமூர்த்தி ஐயர் வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 டி யு சின்னப்பா இசைத்தட்டு 8.20 எஸ் பத்மா பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் பத்மா பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை: 5 திருக்கோடிகாவல் ஆர் கிருஷ்ணமூர்த்தி ஐயர் வயலின் 5-40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் வானிலை 6.15 சித்ரகானம் இசைத்தட்டு 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7-15 புதிய வெளியீடுகள் இசைத்தட்டு 7.30 தமிழில் செய்திகள் 7-45 கமதகபால்ப்பெட்டி 8 காந்தர்வதத்தை நாடகம் 9 ஆங்கிலப் பேச்சு 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஐரோப்பிய சங்கீதம் 10 30 முடிவு.

### வியாழன் மே 23

காலை: 7.15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 பட்டமங்கலம் சாம்பசிவ ஐயர் வீணை 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 சித்ரகானம் இசைத்தட்டு 8-30 கே வி பக்கிரிசாமி பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 கே வி பக்கிரிசாமி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2.30 முடிவு.

மாலை 5 பட்டமங்கலம் சாம்பசிவஐயர் வீணை 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6-15 சாத்தூர் ஏ ஜி சுப்பிரமணியம் இசைத்தட்டு 6-30 குரல் இசை இசைத்தட்டு 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7.15 இலக்கிய வாசகம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 எம் கே கோவிந்தராஜ பாகவதர் பாட்டு 9 கல் இதயம் வசனநாடகம் 9.15 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 கே பி தேவராசு சாக்ஸபோன் 10 இசைவேளை 10 30 முடிவு.

### வெள்ளி மே 24

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 கே வி நடராஜன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 திருச்சி வாத்யகோஷ்டி 8.30 டி பி விசாலாக்ஷி பாட்டு 9 முடிவு,

1 ஆரம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி பி விசாலாக்ஷி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 கோடைக் கல்வி 2.30 முடிவு.

மாலை: 5 கே வி நடராஜன் பாட்டு 5.40 குரான்ஷரீப் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6 15 சித்ரகானம் இசைத்தட்டு 6-45 கிராம நிகழ்ச்சிகள் 7.15 செய்தி விளக்கம் 7-30 தமிழில்செய்திகள் 7-45 ஸ்வபம்வர மண்டபத்தில் 8 பி எஸ் வீருசாமிபிள்ளை நாகஸ்வரம் 9.15 ஆங்கிலத்தில்செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 உலக விவகாரங்கள் 10 இசைவேளை 10.30 முடிவு.

---

குறிப்பு: (க) "எவற்றையும் அறிந்தாரோ" என்பதில் எவற்றையும் என்றது எண்ணிறந்த ஆன்மாக்களின் கன்ம பேதங்களையும் அக் கன்மங்கட்கேற்ற தனுகரண புவனபோகங்கள் முதலியவற்றையுங் குறிக்கும்.

குறிப்பு (உ) "சங்கற்பமானது ஞானமயமோ". ஞானமயம் என்றது பராசத்தியை. 'சிவபெருமான் ஞான சத்தியினாலே நினைந்து (சங்கற்பித்து) உலகமனைத்தையும் சிருட்டிக்கின்றார்" என்பது மேற்போந்த உபநிடத வாக்கியம்.

முண்டகத்து முதற் கண்டம் முடிந்தது. (தொடரும்)

## சிவானந்த வித்தியாலயத்தில் புத்த ஜயந்தி

மட்டக்களப்பு இராமக் கிருஷ்ண சங்கத்து சிவானந்த வித்தியாலயத்தில் புத்த ஜயந்தி 16-5-46 வியாழன் பிற்பகல் $4\frac{1}{2}$ மணிக்கு வித்தியாலய மாணவர்களால் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஸ்ரீமத் சுவாமி ரிஷிகேசானந்தஜீ கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். அவ்வமயம் முறையே வித்தியாலய மாணவர்கள் திரு. ஆ. சுந்தரலிங்கம், K. சங்கரப்பிள்ளை N. தருமலிங்கம் ஆகியோரும் வித்தியாலயத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் திரு. வி. சீ. கந்தையா G. K. S. சஸ்திரி B. A; B. T. அதிபர் திரு. S அம்பலவாணர் B. SC. (Lond) K தெய்வநாயகம் ஆகியோர் ஞானசொரூபி புத்தரின் திவ்விய சரிதையையும் உபதேச மொழிகளையும் எடுத்துக் கூறினர். ஈற்றில் திரு. சு. அ. மூர்த்தியின் நன்றியுரையுடன் பி. ப. 7 மணியளவில் நிறைவெய்தியது.

—நிருபர்

## யாழ்ப்பாணம் இந்து மகாசபை இலவச வாசிகசாலை

மேற்படி வாசிகசாலையின் விசேஷ பொதுக்கூட்டம் சென்ற 1946 ௵ வைகாசி௴ 5உ ஞாயிற்றுக்கிழமை மேற்படி வாசிகசாலை மண்டபத்தில் கூடப்பெற்றது. அத்தருணம் பின் வருவோர் உத்தியோகத்தராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

போஷகர்திரு. C. C சோமசேகரம், சிரேஷ்ட தலைவர் திரு. C. நாகையா, உபதலைவர்கள் R C. மன்மதராயன், திரு. C. வீரசிங்கம், கனிஷ்ட தலைவர் திரு. S S நடராசா, கனிஷ்ட உப தலைவர்கள திரு. P. சண்முகநாதன், திரு. S. துரைச்சாமி, காரியதரிசி திரு. S. கந்தமூர்த்தி, உபகாரியதரிசி திரு. V. இராமகிருஷ்ணன், தனாதிகாரி திரு. K. தனபாலசிங்கம், உப தனாதிகாரி திரு. A. சீனிவாசகம், கணக்குப்பரிசோதகர் திரு. A. கனகரத்தினம். மேலே சொல்லப்பட்டவர்களுடன் 7 நிர்வாகசபை அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

—நிருபர்

---



## இந்துசாதனம்

பத்திரக் கிரயம்

ஒருவருடத்திற்கு

யாழ்ப்பாணப் பட்டின எல்லைக்குள் ஆள் மூலம்

| ஆங்கிலம். | தமிழ். | ஆங்கிலம் தமிழ் |
|---|---|---|
| ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 6 50 | 6 50 | 10 50 |

இந்தியா இலங்கை தபால் மூலம்

| ஆங்கிலம். | தமிழ். | ஆங்கிலம் தமிழ். |
|---|---|---|
| ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| ௮ 50 | ௮ 50 | 13 50 |



விளம்பரமின்றேல் பெரும்பணமில்லை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்திய அரசியல்

### சுதந்திர உதயம்

பாரதநாட்டைப் பந்தித்துவந்த தளைகள் அறுந்து விழுகின்றன. பன்னெடுங்காலமாகப் பாரத மக்களிற் பல்லாயிரக்கணக்கானோர் ஆற்றிய தியாகம் வீண்போகவில்லை. அவர்களின் தியாகத்தினல் பாரததேசம் சுயராஜ்ய லக்ஷியத்தை நோக்கி விரைவாக முன்னேறியது அவ்வேகத்தைத் தடுப்பதற்கு ஏகாதிபத்திய வெறிபிடித்த சேர்ச்சில் கோஷ்டியினராலும் வேறெவராலும் முடியவில்லை. ஹிந்து முஸ்லிம் வேற்றுமைகளைக் காரணமாக வைத்துக்கொண்டு இதுகாறும் பிரிட்டிஷ் பிற்போக்காளர், இந்தியாவையும் உலகத்தையும் ஏமாற்றி வந்தனர். ஈற்றில் இந்த ஜம்பம் எல்லாம் பலிக்காது என்பதை உணர்ந்த பிரிட்டிஷ் அரசாங்கம் "இதோ பிடியுங்கள் சுயராஜ்யத்தை; நாங்கள் விட்டுப்போகிறோம்" என்று சொல்லக்கூடிய நிலைமைக்கு பாரதநாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் சுதந்திரக் கிளர்ச்சி முன்னெருபோதுமில்லாதவாறு நிகழ்ந்தது. இனியும் காலம்போக்கினல், கேவலம் தம் ஜீவியத்துக்கே தீங்கு நேரிடும் என்பதை பிரிட்டிஷ் அரசாங்கம் உணர்ந்தது. தலைசிறந்த இராஜ தந்திரிகள் மூவரை அனுப்பியது. அம்மூவரும் இந்தியாவை அடைந்து இராஜப் பிரதிநிதி வேவலுடன் சேர்ந்து, முஸ்லிம்லீக், காங்கிரஸ், சமஸ்தானங்கள், சீக்கியர்என்னும் பலதிறப்பட்ட கட்சியினர்க்கும் உடன்பாடான ஓர் அரசியலை நிறுவுவதற்காக, குறித்த நாலு கட்சியினரின் உதவியையும் நாடினர். இந்தியாவைத் துண்டாடிவிட்டுச் சுதந்திரத்தைப்பற்றிப் பேசு என்ற கொள்கையை விடாப்பிடியாக முஸ்லிம் லீக் சாதித்தது சமரசமான ஓர் முடிவுக்கு வர முஸ்லிம்லீக் முட்டுக்கட்டை போட்டது. அதனை வழிக்குக் கொண்டுவரச் செய்த முயற்சிகள் யாவும் வீண்போயின. எனவே அக்கட்சியை நிராகரித்து, பிரிட்டிஷ் அரசாங்கம், இந்திய சுதந்திரத்தை அங்கீகரித்து, எதிர்கால அரசியல் விஷயமாகத் தனது திட்டத்தை இப்போது வெளியிட்டிருக்கிறது.

●

### பிரதான அம்சங்கள்

இந்தியா ஒரு தேசம்; அதனைத் துண்டாட முடியாது என்று பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவாகத் தன் தீர்ப்பைக் கூறிவிட்டது. இந்தியாவின் பாதுகாப்பு, போக்குவரத்து, ஏற்றுமதி, இறக்குமதி என்பன நீங்கி, ஏனைய அதிகாரங்கள் யாவும் மாகாணங்களில் ஒப்படைக்கப்படும். இம்மாகாணங்கள் சுயாட்சி பெற்றவையாக இருக்கும். இம்மாகாணங்களும், சமஸ்தானங்களும் அனுப்பும் பிரதிநிதிகளைக்கொண்டதாக மத்திய அரசாங்கம் இருக்கும். இதனைவிட மாகாணங்கள் தமக்குள்ளே சமஷ்டிகளை ஏற்படுத்திக்கொள்ளலாம்; அதாவது சென்னை, பிகார், ஒறிஸா, பம்பாய், ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம் என்பன சேர்ந்து ஓர் சமஷ்டி அரசியலையும், பாஞ்சாலம், சிந்து, எல்லைப்புறம் சேர்ந்து இன்னோர் சமஷ்டியையும், வங்காளமும் அசாமும் இன்னோர் சமஷ்டியையும் நிருமாணித்துக்கொள்ளலாம். ஆனல் இவை எல்லாம் ஓர்சில பொதுவிஷயங்கட்கு மத்திய அரசாங்கத்துக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும். இவற்றையெல்லாம் செய்வதற்கு எல்லா மாகாணப் பிரதிநிதிகளும் அடங்கிய ஓர் அரசியல் நிர்ணயசபை கூட்டப்படும். இந்தச் சபையே எதிர்கால இந்தியாவின் சுதந்திர அரசியலை வகுக்கும். இதற்குச் சிலமாத காலம் — அனேகமாக 2 ஆண்டுகள் — செல்லும். இதற்கிடையில் தேசநிருவாகம் நடப்பது எப்படி? இப்போதுள்ள இராஜப்பிரதிநிதியின் நிருவாகசபை தற்காலிக அரசாங்கமாக மாற்றப்படும். அதில் பொதுஜனத்தலைவரே இனி அங்கத்தவராக இருந்து நாட்டின் நிருவாகத்தை நடத்துவர். இந்திய ராணுவத்தினர் பொறுப்பும் இந்தியர்வசமே, இந்த இடைக்காலத்திலும் இருக்கும். இந்த இடைக்கால அரசாங்கம் இன்னும் இரண்டொரு தினங்களில் அமைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

●

### பெரும்பான்மையோரின் அங்கீகாரம்

பிரிட்டிஷ் மந்திரிகள் அளித்துள்ள தீர்ப்பை, முஸ்லிம் லீக் தவிர, ஏனைய ஸ்தாபனங்கள் யாவும் வரவேற்கின்றன. அந்தத் திட்டத்தில் ஒன்றிரண்டு ஊனமான அம்சங்கள் இருந்தபோதிலும் அதனை ஏற்றுக் கொள்ளவேண்டும் எனத் தேசிய முஸ்லிம்கள், சமஸ்தானங்கள், சீக்கியர், காங்கிரஸ் அபிப்பிராயம் கூறுகின்றன. இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும் வேலையில் இவை யாவும் துரிதமாக வேலைசெய்கின்றன

●

### ஜின்னுவின் மவுனம்

மந்திரிகள் வகுத்துள்ள திட்டம் சம்பந்தமாக முஸ்லிம்லீக் தலைவர் மிஸ்ரர் ஜின்னு மவுனம் சாதிக்கிருர். அவருடைய அறிக்கையைக் காணமுன், அபிப்பிராயம்கூற முஸ்லிம் லீக் வட்டாரங்கள் மறுக்கின்றன. ஆனல் முஸ்லிம் லீக்கின் பிரதான பத்திரிகையான "டோன்" மந்திரிகளின் திட்டம் முஸ்லிம் லீக் கோரியபடி இல்லாவிட்டாலும், இடைக்கால அரசாங்கம் அமைக்கும் விஷயத்தில், அத்திட்டம் நிராரிக்கக்கூடியதாகவில்லை என்னும் கருத்துப்படக் கூறுவதில் இருந்து, முஸ்லிம்லீக் இடைக்கால அரசாங்கத்திற் பங்குபற்றி ஒத்துழைக்கக்கூடும் என்ற நம்பிக்கை பிறக்கிறது.

●

### சேர்ச்சிலின் ஒப்பாரி

இந்திய அரசியல் சம்பந்தமாக வெளியிடப்பட்ட அறிக்கை முஸ்லீம்களுக்குப் பெரும் துரோகம்விளைப்பதாகும் என்றும், இந்தியர் தமக்குள்ளே ஒற்றுமை கொள்ளாமல் இருக்கும் பட்சத்தில், சுதந்திரத்தை அவர்களிடம் திணிப்பது ஆபத்தாகும் என்று மிஸ்ரர். சேர்ச்சில் பாராளுமன்றத்தில் ஓர்பாட்டம் ஒப்பாரி இட்டார். மிஸ்ரர் சேர்ச்சில் தலைவராகவுள்ள கன்ஸர்வேற்றிவ் கட்சியினரைவிட, ஏனைய அங்கத்தவர்கள், இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு வரும்போது, அதனை வரவேற்று ஆதரித்துப் பேசுவர் என்றும், இந்திய சுதந்திரம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டு விடும் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

## நுளம்புக் கொடுமையை ஒழிக்க முயற்சி

### கிளிநொச்சியில் சுகாதார வேலை

கிளிநொச்சியில் நுளம்புகளினல் காட்டுக்காய்ச்சல் என்னும் மலேரியா பரவவிடாமல் தடுப்பதற்கான சகல முயற்சிகளையும்அப்பகுதிச் சுகாதாரஉத்தியோகத்தர் ஸ்ரீகதிர்காமசுவாமி செய்துவருகிருர். கடந்த இரண்டுமாத காலமாக D. D. T. என்னும் நுளம்பு நாசகாரித் திராவகம் தெளிக்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் குடியிருக்கும் வீடுகளுக்கும் இத்திராவகம் தெளிக்கப்பட்டு வருகிறது; இதன்பயனுக இனிக் காட்டுக் காய்ச்சலின் வேகம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.


பரமேஸ்வரக்கல்லூரி

## வெள்ளி விழாக் காணிவல்

### பல அபிமானிகளின் வேண்டுகோளை முன்னிட்டு காணிவல் மே மாசம் 25ந் திகதி தொடக்கம் 29ந் தேதிவரை நீடிக்கப்படுகிறது

நீடிக்கப்பட்ட காணிவலில் அதிகமான களியாட்டங்கள், அதிகமான தீபங்கள், அதிகமான விளையாட்டுப் போட்டிகள் உண்டு; சுருங்கச் சொன்னல் மேலும் புதியதும் பெரியதுமான காணிவல் இனிமேல்தான் ஆரம்பமாகிறது. இதுவரை நடந்தது பரீக்ஷார்த்தமாக நடத்தியது போலவே உங்களுக்குத் தோன்றும்.

காணிவலின் சிகரமாக, கோகிலகான இசைவாணி

## எம். எஸ். சுப்புலக்ஷ்மியின்

## இசைவிருந்து

29-ந் தேதி மாலை 7 மணிக்கு பரமேஸ்வரக்கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகும்.

**காணிவல் முன்றிலுக்கு பிரவேசம் 25சதம்**

**29ந்தேதி மாத்திரம் பிரவேசம் ரூ. 1**

அரை விகிதங்கள் கிடையாது

**இசை விருந்து பிரவேச விகிதங்கள்**

ரூபா 20. ரூபா 15. ரூபா 10.

போஷகர்களுக்கு பிரவேசச் சீட்டுகள் ரூ. 100

சங்கீதக் கச்சேரிக்காக ஆசனவகுப்புமுறை விபரம் (Box Plan) பரமேஸ்வரக்கல்லூரியில் பெறற்பாலது.

ரெலிபோன் இல 81 (Mis 54 21, 24, 28.)


## 27-5-46 தொடக்கம் அரிசி கூட்டிக் கொடுக்கப்படும்

27-5-46 (5-ம் கூப்பன் புத்தகத்தின் 50ம் கிழமை) தொடக்கம் வேறு அறிவித்தல் கொடுக்கும்வரையும் பின்வரும் விகிதம் உணவுப் பொருட்கள் வினியோகிக்கப்படும்.

| வகுப்பு | அரிசி (கொத்து) | | அல்லது நெல் (கொத்து) | கோதுமைமா (இருத்தல்) | கோதுமை (கொத்து) | | குரக்கன் (கொத்து) |
|---|---|---|---|---|---|---|---|
| குழந்தை | $\frac{1}{2}$ | அல்லது | 1 | $\frac{1}{2}$ | $\frac{1}{4}$ | அல்லது | $\frac{1}{4}$ |
| பிள்ளை | $\frac{3}{4}$ | அல்லது | $1\frac{1}{2}$ | $\frac{3}{4}$ | $\frac{3}{8}$ | அல்லது | $\frac{3}{8}$ |
| சாதாரணம் | $1\frac{1}{2}$ | அல்லது | 3 | $\frac{1}{2}$ | $\frac{1}{4}$ | அல்லது | $\frac{1}{4}$ |
| வேலையாள் | $1\frac{1}{2}$ | அல்லது | 3 | 1 | $\frac{1}{2}$ | அல்லது | $\frac{1}{2}$ |

2. சாதாரண கூப்பனுக்கும் வேலையாள் கூப்பனுக்கும் கொடுக்கப்படும் அரிசி ஒரேயளவாகும். இப் புது விகிதம் குழந்தைக் கூப்பனையாவது பிள்ளைக் கூப்பனையாவது பாதிக்கமாட்டாது.

3. வினியோகம் செய்வதற்குக் கோதுமை இல்லாவிடில் குரக்கன் கொடுக்கப்படும். கோதுமையாவது குரக்கனுவது இல்லாவிடில் கோதுமைக்குப்பதிலாகக்கோதுமை மா வழங்கப்படும்.

(ஒப்பம்) ஸ்ரீகந்தா
யாழ்ப்பாணம் உப உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்காக

கச்சேரி. யாழ்ப்பாணம் 17-5-46 (G. 25 21.5-46)

## வண்ணர்பண்ணை வெள்ளாந்தெரு பிள்ளையார்கோவில்

ஷை கோவிலின் திருப்பணியைப்பற்றி ஆலோசிப்பதற்காக விய வருஷம் வைகாசி மீ 3ந் திகதி வியாழக்கிழமை (16 5 46) இரவு 8 மணியளவில் ஷை கோவில் மண்டபத்தில் ஓர் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. நியாயதுரந்தரர் ஸ்ரீ வை. சுப்பிரமணியம் அவர்கள் தலைமை வகித்தனர். பண்டிதர் ம வே. திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்கள் "திருப்பணி" என்னும் பொருள்பற்றி ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர். அதன்பின், இக்கோவிலின் திருப்பணியை நிறைவேற்றவும், கோவிலைச் செவ்வனே நடாத்துதற்காகவும் பின்வருவோரைக்கொண்ட ஓர்சபை நிறுவப்பெற்றது.

போஷகர்: பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை; தலைவர்: ஸ்ரீ N சதாசிவம்; உபதலைவர்: ஸ்ரீ வை சுப்பிரமணியம், ஸ்ரீ இ.இராசரத்தினம்;காரியதரிசி: ஸ்ரீ வே சுப்பிரமணியம்; உபகாரியதரிசி: ஸ்ரீ இ. சிவலோகநாதன், தனதிகாரி: ஸ்ரீ V S. நடராசா; நிருவாக சபையினர்: ஸ்ரீமான்கள் மு. தம்பிஐயா, சோ இராமலிங்கம், ஆ. சிவசம்பு, மு. முத்துத்தம்பி, N. கந்தையா, செ. நடராசாரி ஆச்சா, இ வைத்தீஸ்வர ஐயர், வை. இராமநாதன், ஆ. சுப்பிரமணியம், க. பொன்னம்பலம், மு.சுப்பிரமணியம்,க.பாலசுப்பிரமணியம்.

காரிய நிருவாகசபையாருள் திரு. மு. தம்பிஐயா அவர்கள் கோவிலின் அதிபராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

கோயிலின் திருப்பணிவேலையை நிறைவேற்றுதற்குச் சபையின் பெரும்பாலானோர் ஊக்கம்காட்டித் தம்மாலியன்ற பொருளுதவி செய்வதாகக் கோரிப் பின்வருமாறு கைச்சாத்திட்டனர்:

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ | மு. தம்பிஐயா | ரூபா | 500-00 |
| ,, | ஆ. சிவசம்பு | ,, | 100-00 |
| ,, | V S. நடராசா | ,, | 150-00 |
| ,, | இ. சிவலோகநாதன் | ,, | 150-00 |
| ,, | சி. இராமையா | ,, | 100 00 |
| ,, | V. T. சம்பந்தர் | ,, | 30-00 |
| ,, | வே. சுப்பிரமணியம் | ,, | 25-00 |
| ,, | மு. பொ. சுப்பிரமணியம் | | 50-00 |
| ,, | சு. க. பாலசுப்பிரமணியம் | | 25 00 |
| ,, | சி. நடராசா ஆச்சாரி | ,, | 25 00 |
| ,, | N. கந்தையா | ,, | 25-00 |
| ,, | சி. க. நாகலிங்கம் | ,, | 100 00 |
| ,, | சோ. இராமலிங்கம் | ,, | 2[illegible]-00 |
| ,, | மு முத்துத்தம்பி | ,, | 25-00 |
| ,, | க சுப்பிரமணியம் | ,, | 25-00 |
| ,, | இ. சின்னத்துரை | ,, | 25-00 |
| ,, | இலட்சுமண மூப்பனர் | | 25 00 |
| ,, | N. சதாசிவம் | ,, | 50-00 |
| ,, | நா. சுப்பிரமணியம் | ,, | 50-00 |

இரவு 10 மணியளவில் தேவாரபாராயணத்துடன் கூட்டம் நிறைவேறியது.

(Mis. 52, 21-5-46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க வருமானத்தை விழுங்கும் உத்தியோக வர்க்கம்

## 100ல் 71 விகிதம் வேதனங்களுக்கு நாட்டின் செலவுகளுக்கு 29 விகிதமே

### 15 ஆண்டுக்குள் 18 கோடி அதிகரிப்பு

அரசாங்க சேவையில் உள்ள சகல உத்தியோகத்தர்க்கும் (ஆசிரியர் உட்பட) வேதன உயர்வு அளிக்க வேண்டும் என்று மந்திரசபையினர் தீர்மானித்திருக்கின்றனர் இதுசம்பந்தமாக அவர்கள் தயாரித்துள்ள அறிக்கை இவ்வாரம் அரசாங்கசபையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். அரசாங்கசபையில் இரண்டொரு அங்கத்தவர்கள், இவ்வறிக்கையை எதிர்த்தபோதிலும், அது நிறைவேற்றப்படும் எனத் திடமாக நம்பலாம். இந்த வேதன உயர்ச்சி விஷயமாகப் பின்வரும் விபரங்கள் அவதானிக்கப்படத் தக்கன

நடப்பு வருடத்தில் அரசிறையாக அரசாங்கத்துக்குக் கிடைக்கப்போவது 315,466,000 ரூபா. இதில் உத்தியோகத்தர் வேதனத்துக்காக மாத்திரம் 22 கோடியே 67 லட்சத்து 50ஆயிரம்ரூபாசெலவாகும். எனவே, நாட்டின் ஏனைய செலவுகளுக்காக 9 கோடி ரூபாதான் உண்டு.

1931ம் ஆண்டில் 14 கோடியே 24 லட்சம் ரூபா உத்தியோகத்தர் வேதனத்துக்காகச் செலவிடப்பட்டது, இந்தத்தொகை மிகவும் கூடிவிட்டது என்றுஅக்காலத்திற் சபைமுதல்வராயிருந்த சேர் பாறன் ஜெயத்திலகா முறையிட்டார்.

இலங்கை அரசாங்க வருவாயில் 100க்கு 71 விகிதம் இப்போதுள்ள திட்டப்படி அரசாங்க உத்தியோகத்தர்க்கு வேதனமாக அளிக்கப்படும்.

1922ம் ஆண்டில் இவ்விகிதம் 26 ஆகவும் 1931ம் ஆண்டில் 50 ஆகவும் இருந்தது.

## தமிழ் மக்கள் கடமைஎன்ன?

முதலாம்பக்கத் தொடர்ச்சி

கடித்த வகுப்புவாதிகளாயிருக்கும் சேனநாயக்காக் குழுவினருடன் சேரக்கூடாது என்பதை மீண்டும் வற்புறுத்த விரும்புகிறோம்.

O

இச்சந்தர்ப்பத்தில், தமிழ்ப்பொதுமக்களும் உணரவேண்டியது ஒன்றுண்டு. ஏறக்குறைய 10 ஆண்டுகளுக்கு முன் எம்மால்அனுப்பப்பட்ட பிரதிநிதிகள், தாம் எமக்கு அன்று கொடுத்த வாக்குறுதியை மீறித் தம் மனம் போனபடி கருமம் ஆற்றிவிட்டனர். தேர்தற்காலம் நெருங்க நெருங்க, அவர்கள் மெல்ல மெல்லவாக, நாங்களும் இருக்கிறோம் என்பதை ஒருவாறுஉணர்ந்து, தாம் இதுகாறும் செய்தனவற்றுக்கும், செய்யாதனவற்றுக்கும் சமாதானங்கள் கூறி நம் மத்தியிற் பிரவேசிக்கத் தொடங்குகின்றனர். இந்தப் பத்து ஆண்டுகளிலும், இவர்களிற் பலர் தாம் பொதுஜனஊழியர், ஜனப்பிரதிநிதிகள் என்பதை மறந்துவிட்டனர். இவர்கள் செய்தனவற்றையும், செய்யாதனவற்றையும் மதிப்பிட்டு தக்க தீர்ப்பளிப்பது பொதுமக்கள் கடமையாகும்.

O

தமிழ்மக்கள் தங்கள் தனிப்பெரும் ஸ்தாபனமாகிய அகில இலங்கைத் தமிழர் மகாநாட்டைப் பலப்படுத்த வேண்டும். ஆண்டுதோறும் கூடிப் பயன்தராத் தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டு அப்பால் துயில்புரியும் ஸ்தாபனங்களைப்போல அதனை ஆக்காமல், உண்மையில் ஜீவத்துவம் உள்ள ஓர் ஸ்தாபனமாகத் தமிழர் காங்கிரஸ் விளங்கவேண்டும். அரசியலில் தங்களுடைய தற்போதைய நிலை என்ன என்பதைத் தமிழ்மக்களுக்கு இந்தக் காங்கிரஸ் உணர்த்த வேண்டும். துண்டுப் பிரசுரங்கள் பிரசாரணங்கள் மூலம் பொதுஜனங்களுக்கு இடைவிடாது அறிவுறுத்தல் வேண்டும். அடுத்த ஆடிமாதத்தில் யாழ்ப்பாணத்தில் நிகழவிருக்கும் தமிழர் காங்கிரஸ் இவற்றை ஆலோசித்து ஏற்றனவற்றைச் செய்யுமா?


## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகோள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Y 12 20-11-45—20-11-46 (தி)



வெற்றியைப் பின்தொடர்ந்து இதோ வந்துவிட்டோம்

## அஜ்மீர் ஜெனரல் அஷூரன்ஸ்

வீமாக்கொம்பனி லிமிற்றெட்

ஸ்தாபிதம் 1907

எமது அதிசய சேவையின் அற்புத வெற்றி

| | | |
|---|---|---|
| இப்போதுள்ள பொலிசிகள் ரூபா | 700,00,000—00 | மேற்பட்டது |
| இதுவரை கொடுபட்டதொகை ரூ | 113,00,000—00 | ,, |
| இப்போதைய இருப்பு ரூபா | 170,00,000—00 | ,, |
| 1944ம்ஆ வருஷாந்த வருமானம் | 39,45,103—00 | ,, |

அயுள், அக்கினி, தொழிலாளர் நஷ்டஇடு, விபத்து
முதலியவற்றிற்கு இன்ஷூர் செய்யப்படும்

எவருக்கும் தகுதியான குறைந்த கட்டணப் பணம் உடையது
இலங்கையில் சகலபாகங்களிலும் ஏஜென்ஸ் தேவை
நல்ல சம்பளமும் உத்தியோக நிலைபரமும் கோடுக்கப்படும்
விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

கிளைக் காரியதரிசி, **டொன் கரலிஸ் கட்டிடம்,**
91, முதலாம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.

Mis 154 29-11-45—30-11(தி)



## தந்தரோகசஞ்சீவி

கந்தசாமி வைத்தியர்

### சந்தஞுதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சுடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ யிலும் அனுப்புவோம்.
சீசா மூலிய செலவு வேறு:

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 27 26-4-46—25-10-46



## பசந்த லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேகபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:
**க. ஆறுமுகம்பிள்ளை**
நி. 156, செககடித்தெரு கொழும்பு
Mis 25 23-4-46 [illegible]



## பேர்பெற்ற பேசல் மிஷன் கலிக்கற் ஓடுகள்

உலகப் பிரசித்திபெற்ற, திறமானவையும், நன்மதிப்பு உள்ளவையும், பேசல் மிஷன் கலிக்கற் ஓடுகளே. மிகக் குறைந்த தண்ணீரை உறுஞ்சுவன. கடைகளில் விலைப்படும் பலதினிசு ஓடுகளையும் நிறுத்துப்பார்த்துத் தண்ணீருள் நனையவிட்டுபபின்னும் நிறுத்து எது கூடிய தண்ணீரை இழுக்குமெனப் பரிசோதித்துப் பாருங்கள். தற்கால நிலைமைக்கும். தேவைகளுக்கும் ஏற்ற ஒரு புதுமாதிரி இவ்வோடுகள் செருகு விழிம்பும், இரட்டைப் பீலியும் உள்ளனவாய்ச செம்யபபட்டு இக்காலத்தில் அதிகமாய் உபயோகிக்கப்படுகின்றன. கீழைத் தேசத்தில் விலைப்படும் ஓடுகளுள் இவைகளே முதன்மை பெற்றன. வாங்கத் தீர்மானிக்குமுன் இவ்வோடுகளை ஒருதரம் பாருங்கள், கவனியுங்கள். மற்றைய ஓடுகளில ஏமாந்து நட்டப்படாதீர்கள்.

வேறு சாதி ஓடுகளைப்போல வழக்கமான தனிப் பீலி ஓடும்
இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

வில்லியம் மேதர் அன்சன்ஸ், தனி ஏசன்ட்
1888-ம் ஆண்டுமுதல்.

Misc. 250—19-3-46—19-9-46) (செ)



## விளம்பரம்

சங்கீதந் தெரிந்த பயிற்சிபெற்ற ஆசிரியை தேவை. விண்ணப்பங்கள் நற்சாட்சிப் பத்திரங்களுடன் 28-5-46 வரையும் ஏற்றுக்கொள்ளப்பெறும்.

இ. சோமசுந்தரம்
கொழும்புத்துறை, முகாமைக்காரர்
சைவ வித்தியாசாலை, 15-5-46

(Misc. 43 17 & 21-5-46)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday May. 21, 1946,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org